# வவுனியா மன்னார் நகரப்பகுதி நண்பகலுடன் மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடுகிறது


பக்கங்கள் நான்கு — விலை ரூபா:- 4-00

முரசொலி

முரசு 05 ஒலி 12 பிரமோதூத கார்த்திகை 23 (09-12-1990) ஞாயிறு


வவுனியா நகரம் நண்பகலுடன் வெறிச்சோடிக் காணப்படுகிறது. வழமையாக காலை 8 மணிக்கு முக்கிய அலுவல்களுக்காக மக்கள் இங்குவருவார்கள் நண்பகலானதும் சிலஅலுவலகங்கள், வர்த்தகநிலையங்கள் மூடப்படுகின்றன இரண்டொரு வாகனங்களும் படையினரின் வாகனங்களும் நகரில் நிறுத்தப்படுவதையும் காணலாம். பகல் 2 மணிக்குப் பின்னர் எவருமே நகருக்குள் வருவதில்லை அங்குள்ள அமைதியான சூழ்நிலை கூட அவர்களைப் பயம் கொள்ள வைத்துவிடும் வீதிகளில் இராணுவத்தினரையும், பொலிஸாரையும் தவிர வேறு எவரையும் காணமுடியாது. இதே போலவே மன்னார் நகரும் நண்பகலுடன் சனநடமாட்டமின்றி காணப்படுகிறது இங்கும் நண்பகலுக்குப் பின்னர் வீதிகளில் படையினரைக் காணமுடிகிறது அரச ஊழியர்களை கட்டாயம் கடமைக்கு வருமாறு பணிக்கப்பட்டுள்ளதால் ஒரு சில ஊழியர் கடமைக்குத் திரும்பியுள்ளனர். (47, 33)

### நீலாவணை, ஆரையம்பதி, திருக்கோவில்

# 79 தமிழ்ப் பொதுமக்கள் இராணுவத்தால் படுகொலை

## சடலங்கள் ரயர்போட்டு எரிப்பு

கடந்த ஒருவாரத்தில் கிழக்கு மாகாணத்தில் எழுபத்தொன்பது தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

**நீலாவணை**

கடந்த வியாழன், வெள்ளி ஆகிய இரு தினங்களில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள நீலாவணைப் பகுதியில் இராணுவத்தினரும் ரெலோ இயக்கததினரும் இணைந்து அப்பகுதியிலுள்ள மாணவர்களையும் பொதுமக்களையும் கைது செய்து 76 பேரை சித்திரவதை செய்து பின்னர் உயிருடன் ரயர் போட்டு எரித்துள்ளனர்.

**திருக்கோவில்**

திருக்கோவில் பகுதி விசேட அதிரடிப்படைமுகாமில்உள்ள படையினர் விநாயகபுரத்திற்கு வந்து அங்கு 6 பேரைக் கைது செய்தனர்.

பின்னர் இவர்களில் 2பேரை சுட்டுக் கொன்றுவிட்டு 4 பேரையும் தம்முடன் அழைத்துச் சென்றுள்ளனர்.

**ஆரையம்பதி**

கடந்த வியாழனன்று ஆரையம்பதி 3ம் கட்டையைச் சேர்ந்த செபமாலை (45 என்பவரை ரெலோ இயக்கத்தினர் சுட்டுக் கொன்றுள்ளனர்.

இதேவேளை நேற்று முன்தினம் பகல் 12 மணியளவில் களுதாவளையில் வைத்து ம. பகீரதன் (14) என்னும் மாணவனை களுதாவளை இராணுவமுகாமிற்கு அழைத்துச்

—04 ஆம் பக்கம் பார்க்க

## மிதிவெடியில் சிறுமி காலிழப்பு

திருமலை மாவட்டத்திலுள்ள இராணுவ முகாமில் இருந்து இராணுவம் வெளியேறி 6-ம் கொலனியூடாக செல்லும்போது அப்பகுதியில் மிதிவெடிகளை புதைத்துச் சென்றுள்ளனர்.

இம் மிதி வெடியில் சிக்கிய 8 வயதுச் சிறுமி காலிழந்துள்ளார். (71)

## கும்புறுப்பிட்டியில் மிதிவெடியில் சிப்பாய் பலி

நேற்று முன்தினம் திருமலை மாவட்டத்திலுள்ள கும்புறுப்பிட்டி பகுதியில் 2 மிதிவெடியில் சிக்கிய இராணுவத்தினரில் ஒருவர் பலியானார். ஒருவர் காலிழந்தார். (71)

## மாங்குளம் முகாமைப் பார்வையிட அடுத்தவாரம் முதல் அனுமதி

விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட மாங்குளம் முகாமை அடுத்தவாரம் பொதுமக்கள் பார்வையிட அனுமதிக்கப்படவுள்ளது.

மாங்குளம் பிரதான வீதியில் இன்னமும் போக்குவரத்து சீராகவில்லை. விடுத

—04 ஆம் பக்கம் பார்க்க

## மன்னார், கிளிநொச்சி குண்டுவீச்சு கோயில், வீடுகள் சேதம்

மன்னார் மாவட்டத்தில் உள்ள அச்சாங்குளத்தில் 4 குண்டு வீச்சுவிமானங்கள் இரண்டு தடவை தாக்குதல் நடத்தின.

நேற்று முன்தினம் காலை 6 30 க்கும் 9 மணிக்கும் இடம் பெற்ற குண்டுவீச்சுகளினால் அம்மன் கோயில் ஒன்று சேதமடைந்தது. அத்துடன் ஜீவன் (நானாட்டான்) காயமடைந்துள்ளார்.

இதைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள புளியம் பொக்கணைச் சந்திப் பகுதியில் குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதலை நடாத்தியுள்ளன.

பகல் 11 20 மணியளவில் இடம் பெற்ற இக்குண்டு வீச்சினால் வேலாயுதம் அம்பலவாணர் என்பவரின் வீடும் சேதமடைந்து கால் நடைகளும் கொல்லப்பட்டுள்ளன. (71)

## அமெரிக்க ஆசிரியர் அகதிகளுக்கு உதவி

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆங்கில ஆசிரியரும், அமெரிக்காவைச் சேர்ந்தவருமான திரு ஆர், ஜி. போட்டர் பிரான்பற்றுக் கலைமகள் வித்தியாலயத்தில் தங்கியுள்ள அகதிகளுக்கு ஒரு மாத காலத்திற்கு நிவாரணப் பொருட்களை வழங்குவதற்கு முன்வந்துள்ளார்.

இதன் முதற் கட்டமாக கடந்த செவ்வாய்க்கிழமையன்று பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ. யின் அனுசரணையுடன் இவ் அகதிகளுக்கு திரு போட்டர் நேரடியாக விஜயம் செய்து உணவுப்

—04 ஆம் பக்கம் பார்க்க

## வங்காலை ஊடாகவே மன்னார் செல்ல வேண்டும்

மன்னார் தீவுப் பகுதிக்கு செல்வதற்கு வங்காலை ஊடாக மக்கள் செல்ல வேண்டுமென்று இராணுவம் உத்தரவுபிறப்பித்துள்ளதாம்.

வங்காலையிலிருந்து தள்ளாடி வரை செல்லும் பிரதான பாதையூடாக சயிக்கிள்களிலும், நடந்தும் செல்ல வேண்டுமென்றும் வாகனங்களில் செல்லக் கூடாதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

தள்ளாடியிலிருந்து மன்னார் தீவுக்கு செல்பவர்கள் சில யார் தூரம் வள்ளத்தில் செல்ல வேண்டும்.

— 04 ஆம் பக்கம் பார்க்க

## யாழ் நகரில் மூன்று தினங்களில் 600 நாய்கள் ஒழிப்பு

கடந்த மூன்று தினங்களில் மட்டும் யாழ் மாநகரில் 600 க்கும் மேற்பட்ட கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்பட்டு ஒழிக்கப்பட்டுள்ளதாக யாழ் மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த 5.ம் திகதி இந்த 'நாய் ஒழிப்பு' வேலைகள் யாழ் நகரில் ஆரம்பமாகியிருந்தன.

விசர்நாய்க்கடிக்கு பலர் உள்ளாகி வருவதாலும்

—04 ஆம் பக்கம் பார்க்க

## பெண் சமூகவிரோதிக்கு மன்னாரில் மரணதண்டனை

மன்னார்ப் பகுதியில் இராணுவத்துடன் தகாத முறையில் தொடர்பு வைத்தமைக்காகவும் மற்றும் சமூக விரோதச் செயல்களிலும் ஈடுபட்டு வந்தமைக்காகவும் அன்னபூரணி(29) (கொலன்) பேசாலை என்பவருக்கு விடுதலைப் புலிகள் மரண தண்டனை விதித்துள்ளனர்

இவர் கள்ளச் சாராயம் விற்பவர் எனக் கூறப்படுகிறது இவர் மூன்று திருமணங்கள் புரிந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (71)

### பாதிக்கப்பட்ட தமிழருக்கு நிதிஉதவி

## உலகத்தமிழர் வங்கி அமைகக கோலாலம்பூர் மாநாட்டில் முயற்சி

அனைத்து உலகத் தமிழர்களின் முதலாவது மாநாடு எதிர்வரும் புதன்கிழமை மலேஷியத் தலைநகர் கோலாலம்பூரில் ஆரம்பமாகிறது.

மூன்று நாடகளுக்கு நடைபெறவுள்ள இம் மாநாட்டில் பத்தாயிரம் பேராளர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்ப்பதாக மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

மாநாட்டில் உலகத்தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைப்பது

— 4 ஆம் பக்கம் பார்க்க

### டீசல் கையிருப்பு முடிகிறது

## வைத்தியசாலை அவசர தேவைக்கு மட்டுப்படுத்திய மின்விநியோகம்

யாழ் போதனாவைத்திய சாலைக்கான ஜெனரேற்றர் மின்சாரம் கடந்த மூன்று தினங்களாக மட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

— 4 ஆம் பக்கம் பார்க்க

## நாளை முதல் முரசொலி 4-50

அன்பார்ந்த வாசகர்களே!

பத்திரிகைத் தாளின் விலை பன்மடங்கு உயர்ந்து விட்டது.

மிகுந்த தயக்கத்துடன் நாளை தொடக்கம் முரசொலியின் விலையை 50 சதத்தால் உயர்த்துகிறோம்.

செய்திப் பெருமதியாலும் சிறப்பம்சங்களாலும் இவ் வதிகரிப்பை ஈடுசெய்யவுள்ளோம் என்பதை அறியத் தருகிறோம்.

நிர்வாகம்

## முரசொலிக்கு வந்த கடிதம்

# களம்பல கண்ட கோட்டை

ஆசிரியர்,
முரசொலி.

'செங்கை ஆழியான்' எழுதி முரசொலியில் வெளிவந்த 'களம்பல கண்ட கோட்டை' யைத் தொகுத்து வைத்திருந்த நண்பர் ஒருவரிடம் பெற்று வாசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது

கோட்டை உருவாகிய வரலாறும் முற்றுகைகள் பற்றிய பல சுவையான தகவல்களும் தரப்பட்டுள்ளன.

கோட்டையிலிருந்து ஏவப்பட்ட ஷெல்லால் மண நாளன்றே கணவனை இழந்த பெண்ணின் சோகம் நெஞ்சைப் பிழிந்தது.

இவ்வரலாற்று விவரணத்தை எழுதிய 'செங்கை ஆழியா' னுக்கும் வெளியிட்ட 'முரசொலி'க்கும் இளைய தலைமுறை பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

இணுவில். கனக. பிரபா

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு

# உலக வங்கிப் பணத்திற்கு அரசு ஆயுதம் வாங்கியது

உலகவங்கி இலங்கைக்கு அபிவிருத்தி நோக்கத்தோடு வழங்கிய நிதியுதவி ஆயுதப் படையினருக்கு ஆயுதம் வாங்கப் பயன் படுத்தப்பட்டுள்ளதாகப் பாராளுமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டுளளது.

இலங்கை அரசு இவ்வாறு நடந்து கொண்டதன்மூலம் உலக வங்கியை ஏமாற்றி விட்டதாகவும், நம்பிக்கை மோசடி செய்து விட்டதாகவும் பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

திறைசேரி உண்டியல்மூலம் பணம் பெறுதல் பிரேரணையின்போது சுதந்திரக்கட்சி உறுப்பினர் தர்மசிறி உரையாற்றுகையில்,

'நாட்டில் இன்று ஏற்பட்டிருக்கும் அமைதியின்மைக்கு இந்த அரசே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். நாட்டில் சமாதானம் இன்மைக்கு அரசின் நிர்வாகத் திறமையின்மையே காரணம்.'

'இதனாலேயே அரசாங்கம் வடக்கில் தோல்வி கண்டது. வடக்கு கிழக்கில் யுத்தமும் அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இல்லை, சமாதானமும் அதன் கட்டுப்பாட்டின்கீழ் இல்லை' என்று குறிப்பிட்டார். (38)

# 800 எயிட்ஸ் நோய்க் காவிகள் இலங்கையில்இருப்பதாகச்சந்தேகம்

இலங்கையில் இதுவரையில் இருபத்தெட்டு எயிட்ஸ் நோயாளிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனரென்றும், அவர்களில் இருபத்தொரு பேர் இலங்கைப் பிரசைகள் ஆவர் என்றும் சுகாதார அமைச்சின் சௌக்கிய சேவைகள் செயலாளர்நாயகம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிலையக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ''பெண்களும் எயிட்ஸ் நோயும்'' என்னும் தலைப்பிலான கருத்தரங்கில் பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; அடுத்துவரும் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள் இந்நோயாளிகளின் எண்ணிக்கை பெருமளவு அதிகரிக்கக்கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளதென்றும், இருபத்தெட்டுபேர் கண்டுபிடிக்கப்பட்ட போதும், இந்நோய்க்கான எச். ஐ. வீ. எனப்படும் வைரசுக் கிருமிகளைக்கொண்ட எண்ணூறுக்கும் அதிகமான நோய்க்காவிகள் இருக்கலாம் எனவும் தெரிவித்தார். (47)

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) 'மண்டேலா ரேடர்' இல 256 A, பருத்தித்துறை வீதி, நல்லூர், 'அரஸ் ஜவுளியகம்' 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 12066

### தவறிவிட்டது

யாழ்ப்பாணம் K. K. S. வீதியிலுள்ள பன்றிக் கோட்டுப் பிள்ளையார் கோவிலடிக்கும், தட்டா தெருச் சந்திக்குமிடையில் ஒரு பேஸ் (Purse) 7. 12. 90 அன்று தவறிவிட்டது. இதற்குள் Passport போன்ற முக்கிய ஆவணங்கள் அடங்கியிருந்தன, இதனைக் கண்டெடுத்தோர் தயவுசெய்து முரசொலிக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். 12069

### மாவீரர் போட்டி முடிவுகள்

மாவீரர் தினத்தையொட்டி ப. நோ. கூ. சங்கங்களுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டியில் நீர்வேலி ப. நோ. கூ. சங்கம், தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம் என்பன கூட்டாக முதலிடத்தைப் பெற்றுள்ளன.

மூன்றாமிடத்தைப் புங்குடுதீவு ப. நோ. கூ, சங்கம் பெற்றுள்ளது.

### புதுமுறிப்பில ஒளிவிழா

கிளிநொச்சி புதுமுறிப்பு விக்னேஸ்வரா பாடசாலையில் ஒளிவிழா நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கிறிஸ்து பிறப்பின் வரலாற்றைச் சித்தரிக்கும் நாடகங்கள் பாடசாலைச் சிறுவர்களால் நடித்துக் காண்பிக்கப்பட்டன.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வண. பிதா சூரியகுமார் அடிகள் தமது உரையில் துரிதமாக வளர்ந்து வரும் புதுமுறிப்பு விக்னேஸ்வரா பாடசாலை எதிர்காலத்தில் சிறந்த வித்தியாலயமாக மாறும் எனத் தெரிவித்தார். அதிபர் க. மகேசன் தலைமையில் விழா நடைபெற்றது. (ப-6)

### கசிப்பு ஒழிப்பு தீவிரம்

புங்குடுதீவுப் பகுதியில் என்றுமில்லாதவாறு கசிப்பு விற்பனை அதிகரித்து வருகின்றது.

இதனைக் கட்டுப்படுத்தும் வேலையில் புங்குடுதீவுப் பகுதியில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர்.

பனம் சாராயம் என்று சொல்லிக் கொண்டு கசிப்பை விற்பனை செய்த வியாபாரிகள் பலர் விடுதலைப் புலிகளினால் கையும்மெய்யுமாகப் பிடிபட்டனர்.

அதுமட்டுமல்லாமல் அவர்கள் ஒளித்து வைத்து விற்பனை செய்து வந்த கசிப்பும் கண்டு பிடிக்கப்பட்டு பறிமுதல்செய்யப்பட்டுள்ளது. 20

### புதிய ஆலயம்

பூநகரி தம்பிராய்க் கிராமத்தில் புதிதாக கிறிஸ்துராசா ஆலயம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. பூநகரி புனித மரியாள் ஆலய பங்குத் தந்தை ஜேம்ஸ் பத்திநாதன் தலைமையில் அருட்தந்தை தவராசசிங்கம் அடிகளார் திவ்விய பூசைப்பலியை நிறைவேற்றி ஆலயத்தை வழிபாட்டுக்குத் திறந்து வைத்தார். (ப-35)

### ஆசிரியர்கள் தொடர்ந்தும் காவலில்

குருநகர்ப் பகுதியில் நிவாரணப் பொருள் பதுக்கல் தொடர்பாக விடுதலைப்புலிகளினால் கைதுசெய்யப்பட்ட மூன்று ஆசிரியர்களும் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக கைதான கண்டுக்குளி தெற்கு கிராம சேவையாளர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இந்தப் பதுக்கல் மேற்படி கண்டுக்குளி தெற்கு கிராம சேவையாளர் பிரிவிலேயே இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ப- 17)

### அரசாங்க நிறுவனங்களுக்கும் பொது ஸ்தாபனங்களுக்கும் ஒரு வேண்டுகோள்

போக்குவரத்து வசதிகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ள நிலையில், பொதுநிறுவனங்கள் மக்களுக்கோ தமது ஊழியர்களுக்கோ அறிவிக்கும் செய்திகளை முரசொலி இலவசமாகப் பிரசுரித்து வருகிறது. காகிதத் தட்டுப்பாடு ஏற்படுத்தியுள்ள இடநெருக்கடியால் நாம் திணறிக் கொண்டிருக்கையில், அரசாங்கத் திணைக்களங்கள், வர்த்தக வங்கிகள், தொண்டு நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள் ஆதியன தமது அறிக்கைகளை உடனடியாக நாம் பிரசுரிக்க வேண்டுமென எதிர்பார்ப்பது நீதியில்லை. ஆகவே அறிவித்தல்களைச் சுருக்கமாக எழுதி, குறைந்தது இரு தினங்களுக்கு முன்பாக, தந்து ஒத்துழைக்குமாறு வேண்டுகிறோம்.

ஆசிரியர்


கூலிப்படையாக வந்த
கொச்சியாருடன் மோதி
வீரமரணமடைந்த
மண்ணின் மைந்தன் யார்?

'பலாலி தளமான கதை'

விடை தருகிறது —
விரைவில், முரசொலியில்!

இடமாற்றம்

அரஸ் ஜவுளியகம்

மீண்டும் பழைய இடமான
146, நவீன சந்தை, யாழ்ப்பாணத்தில்
இயங்குகிறது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்
12053

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

இராமநாதன் நுண்கலைக்கழகம்

இசைக்கலைமணி | நாட்டியக்கலைமணி
டிப்ளோமா பயிற்சி நெறியினைப்

பயிலுவதற்கான அனுமதி
(1990/91)

மேற்குறித்த பயிற்சி நெறியினை பயில அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

தகைமைகள்:-

1. பரீட்சார்த்திகள் க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் குறைந்தது மூன்று பாடங்களில் கர்நாடக சங்கீதம் அல்லது பரத நாட்டியம் ஒரு பாடமாகச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். கர்நாடக சங்கீதம் அல்லது பரத நாட்டியத்தில் சித்திபெறாதவர்கள் வட இலங்கை சங்கீத சபையினரால் நடாத்தப்படும் தரம் 4 இல் சித்தி பெற்றிருப்பதுடன் க. பொ த (உயர்தரம்) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

2. பரீட்சர்த்தி 31. 01. 1991 அன்று 25 வயதிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தையும் மேலதிக விபரங்களையும் பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் ரூபா 15/-க்கான காசுக்கட்டளை அல்லது தபாற் கட்டளையை நேரில் சமர்ப்பிப்பதன் மூலமோ அல்லது சுய விலாசமிடப்பட்டதும் முத்திரை ஒட்டப்பட்டதுமான 23×10 செ. மீ அளவினதான கடித மேலுறையுடன் தபால் மூலமோ, சிரேஷ்ட உதவிப்பதிவாளர் / தேர்வுகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் ஏற்பதற்கான கடைசித் திகதி 31. 01. 1991 ஆகும்.

பதிவாளர்

12065

# சிறிய செய்திகள்

### மண்டைதீவுதாக்குதல் 3-வது நபரும் மரணம்

இம்மாதம் 1-ம் திகதி மண்டைதீவுக் கடலில் அறக்கொட்டியான் வலை மூலம் தொழில் செய்து கொண்டிருந்தபோது கடற்படையினரால் தாக்கப்பட்டுப் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா லவத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த குருநகர் மீனவரான சவரியான் மரியதாஸ் (வயது 35) கடந்த புதன்கிழமை மரணமானார். இவர் நான்கு பிள்ளைகளின் தகப்பனாராவர்.

இவருடன் ஒரே படகில் தொழில் செய்த பிரகாசம் இராசேந்திரம் (62), இராயப்பு பிரான்ஸிஸ்(48) ஆகிய இருவரும் கடற்படையினரின் தாக்குதலில் ஸ்தலத்திலேயே பலியானது குறிப்பிடத்தக்கது. (ப-17)

### சட்ட வகுப்புகள் அடுத்தவாரம்ஆரம்பம்

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தால் நடாத்தப்பட்டு வரும் சட்ட வகுப்புகள் அடுத்த வாரம் முதல் வார இறுதி நாட்களில் காலை 8 30 மணிமுதல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டத்துறைக்கான ஆங்கில வகுப்புகள் இம்மாதம் 15-ம் திகதி சனிக்கிழமை தொடக்கம் நேர அட்டவணையின்படி நடைபெறும். மாணவர் தவறாது யாழ் பிரதேச நிலையத்திற்கு சமுகம் கொடுக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர். (ப-7)

### ஆசிரியர் சங்க நிர்வாகிகள் கூட்டம்

நவம்பர் மாத ஆசிரியர்களின் வேதனம் இதுவரைகாசாக வழங்கபபடாமை. இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கு இடம்பெயர்ந்த இடங்களிலேயே இடமாற்றம் செய்யவேண்டிய சூழ்நிலை, இவ்வருடம் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நடைபெறாத க. பொ. த. சாதாரண, உயர்தரப் பரீட்சைகளினால் தமிழ் மாணவர்களுக்கு ஏற்படும் நன்மை தீமைகள் முஸ்லிம் பாடசாலைகளில் கற்பிக்கும் தமிழர் ஆசிரியர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் போன்ற பல விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து தீர்மானங்கள் மேற்கொளளப்பட்டு நடவடிக்கைகள் எடுப்பதற்காக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க நிர்வாகிகளின் கூட்டம் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு சங்கத்தின் புதிய தலைமைப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கலந்து கொளளுமாறு யாழ் மாவட்டத்திலுள்ள சகல தாய்ச் சங்க நிர்வாகிகளையும் சகல மாவட்ட நிர்வாகிகளையும், கிளைச்சங்கங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர்களையும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க் பொதுச் செயலாளர் த. மகாசிவம் கேட்டுள்ளார்.

### விமானத் தாக்குதலால் வகுப்பறைகள் சேதம்

கடந்த வாரம் பளையில் இடம்பெற்ற விமானத் தாக்குதலினால் பளை மகா வித்தியாலயத்திற்கு ரூபா ஏழு லட்சத்திற்கு மேல் சேதமேற்பட்டுளளதாக அறியப்படுகிறது.

மகா வித்தியாலயத்தின் விஞ்ஞான ஆய்வு கூடம் மற்றும் பல வகுப்பறைகள் பலத்த சேதமடைந்துள்ளன. (ப-3)

### தாக்குதல்களால் 27 பாடசாலைகள் பலத்த சேதம்

இராணுவ நடவடிக்கையாலும் விமானத் தாக்குதலாலும் யாழ் மாவட்டத்தில் இதுவரை 27 பாடசாலைகள் பலத்த சேதமடைந்துள்ளன. 15 பாடசாலைகள் சிறு சேதமடைந்துள்ளன.

மாணவர்களின் கல்வியைப் பாதிக்காத வகையில் இப்பாடசாலைகளை வேறுஇடங்களில் இயங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் அகதி முகாம்கள் உள்ள பாடசாலைகளின் ஆசிரியர்கள் தமது பாடசாலை மாணவர்களை தனியார் வீடுகளிலும், பொதுக் கட்டிடங்களிலும் வைத்து கற்பிக்குமாறு யாழ் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (74)

### 7000 மாணவர்கள் புலமைப்பரிசுபெறுவர்

இவ்வருடம் 5-ம் வகுப்பிற்கு நடைபெற்ற புலமைப் பரிசுப் பரீட்சையின் பெறுபேறுகளின்படி, சுமார் 30 ஆயிரம் மாணவர்கள் வேறு பாடசாலைகளுக்குச் சேர்த்துக் கொள்ளக் கூடிய தகைமையும், 7 ஆயிரம் மாணவர்கள் புலமைப் பரிசு பெறக்கூடிய தகைமையும் பெற்றுள்ளார்கள் என்று தெரிகிறது.

இப்பெறுபேறுகள் கல்வி அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் கூடிய விரைவில் இவை பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுமென்றும் தெரிகிறது. (47)

### அச்சுவேலிப் பகுதி பாடசாலைகளில் நீலவெள்ளைக்கொடி

அச்சுவேலிப் பகுதியில் இயங்கிவரும் சகல பாடசாலைகளிலும் பாதுகாப்புக் கருதி நீல வெள்ளை நிறம் கலந்த இரட்டைநிறக்கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன.

பாடசாலை வளவினுள் துல்லியமாகத் தெரியும் இடத்தில் உயரமாக இக்கொடி கட்டிப் பறக்க விடப்பட்டுள்ளது.

எனினும் பருத்தித்துறையில் கடந்த வியாழக்கிழமை நடந்த பொம்மர் குண்டு வீச்சையடுத்து இங்குள்ள பாடசாலைகளில் பிள்ளைகளின் வரவு மிகவும் குறைவாகக் காணப்படுகிறது. (ப-24)

### விண்ணப்பப் படிவம் விநியோகம்

யாழ் தொழில்நுட்பக் கல்லூரியில் 1990 - 91 கல்வி யாண்டுக்குப் புதிய மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான விண்ணபப்படிவங்கள் கல்லூரியினால் வழங்கப்பட்டு வருகின்றன.

தற்போது 300க்கும் மேற்பட்ட புதிய விண்ணப்பங்கள் கல்லூரி அதிபரிடம் வந்து சேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி முடிவுற்றிருந்தும் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு தற்போதும் விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு வருகின்றன. (ப-2, ப-11)

### பருத்தித்துறையில் நியாயவிலைக்கடை

பாவனையாளர்களின் வசதியை முன்னிட்டு பருத்தித்துறை நகரப் பகுதியில் நியாய விலைக் கடை ஒன்று திறந்து வைக்கப்பட்டுளளது

இக்கடையில் அத்தியாவசியப் பொருட்கள் நியாய விலைக்கு விற்கப்பட்டு வருகின்றன. (ப-24,50)

---

தொழிற்சங்க சம்மேளனம் கோரிக்கை

# விடுதலைப்புலிகளுடன் அரசு பேசி இணக்கத்திற்கு வரவேண்டும்

'விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் பேசுவதை அரசு கைவிட்டால் இன்றைய வடக்கு கிழக்கு மோதல் வருடக் கணக்கில் தொடரக்கூடிய துர்ப்பாக்கிய நிலைதான் ஏற்படும். எனவே விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேசி ஒரு நீதியான அரசியல் இணக்கப்பாட்டிற்கு வரவேண்டும்'.

இவ்வாறு அரசாங்கத்தைக் கோரும் தீர்மானமொன்றை இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம் எடுத்துள்ளது.

தொழிற்சங்க சம்மேளனத்தின் 50 வருட பூர்த்தியையும், தொழிற்சங்கப் போராட்டத்தின் நூற்றாண்டு நிறைவையும் முன்னிட்டு ஏழாம் திகதிமுதல் கொழும்பு கலாபவனத்தில் நடைபெற்றுவரும் மகாநாட்டில் இத்தீர்மானம் சமர்ப்பிக்கப்படுமென சம்மேளனத் தலைவர் எம் ஜி. மெண்டிஸ் தெரிவித்துள்ளார். (47)

வன்செயலால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்

## சம்பள முற்பணக் கடனுக்கு வட்டி அறவிடப்படுவது நிறுத்தம்

1983-ம் ஆண்டுக்குப் பின்னர் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட, அரசாங்க ஊழியர்களுக்கும், உத்தியோகத்தர்களுக்கும் சம்பள முற்பணக் கடனாக வழங்கப்பட்ட இரண்டு வருடத்திற்குரிய தொகை இதுகாலவரையும் அதற்குரிய வட்டியுடனேயே அறவிடப்பட்டு வந்தது. இக்கடனுக்கு அறவிடப்பட்டு வந்த வட்டியை உடனடியாக நிறுத்துமாறு பொது நிர்வாக அமைச்சு தனது 45-90-ம் இலக்கச் சுற்று நிருபம்மூலம் சகல ( கணக்களத் தலைவர்கட்கும் அறிவித்துள்ளது.

இதன்மூலம் இதுவரை அக்கடனுக்காக அறவிடப்பட்ட வட்டி அக்கடனைப் பெற்றவருக்குத் திருப்பி வழங்கப்படவிருக்கிறது - அல்லது அவரது நிலுவைக் கடனில் கழிக்கப்பட இருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளும் அச்சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (47)

வடக்கு கிழக்கிலுள்ள

## நிர்வாக சேவை வெற்றிடங்களுக்கு கொழும்பில் போட்டிப் பரீட்சை

இலங்கை நிர்வாக சேவை வெற்றிடங்களை நிரப்புவதற்காகக் கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் போட்டிப் பரீட்சை திட்டமிட்டபடி கொழும்பில் நடாத்தப்பட்டது இப்போட்டியில் தெரிவு செய்யப்படுபவர்கள் இலங்கையின் வட, கிழக்கு மாகாணங்களிலுள்ள வெற்றிடங்களுக்கே நியமனஞ் செய்யப்படுவர்.

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள எட்டு மாவட்டங்களிலும் உள்ள சுமார் நூற்றிஐம்பது வரையான நிர்வாக சேவைப் பகுதிகளுக்கு இவர்கள் நியமனஞ் செய்யப்படவுள்ளனர். இப்பதவிகளை இப்போது அதி சிறப்புத்தரம், எழுதுவினைஞர் தரம் ஒன்று, தரம் இரண்டு ஆகியவற்றிலுள்ளவர்களே பதில் கடமையாற்றுவதன்மூலம் நிரப்பி வருகின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் இருபத்தைந்துக்கு மேற்பட்ட நிர்வாக சேவை வெற்றிடங்கள் இருப்பதாகத் தெரிகிறது.

வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கென நடாத்தப்பட்ட இப்போட்டிப் பரீட்சை நடைபெற்ற காலத்தில், வடமாகாணம்பூராகவும்காலவரையறையற்ற ஊரடங்கு அமுலில் இருந்தது என்பதால் கணிசமான தொகையான விண்ணப்பதாரிகள் இப்பரீட்சைக்குச் சமுகமளிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (47)

### இரசிக மணி

ஆயிரம் ஆயிரம்
விற்பனர் வரலாம்;
ஆனால் இலக்கியம்
சுவைப்பதற்கெங்கள்
கனக செந்தியைப்
போலெவர் உள்ளார்!

இலைமறை காயாய்
இருந்தவர் எல்லாம்
தலைமை பெற்றுயரச்
செய்த மா மனிதன்
ஈழ நாட்டுப்
பேனா மன்னரை
வாழ வைத்தநம்
ரசிக மணிபுகழ்
பேசுநாள் இதுவாம்!
அவன் கலைமரபு
வீசுக எங்கும்
விளைக தமிழ்ப்பயிர்!

—'கைதையூரான்'

(இன்று காலை கம்பன் கோட்டத்தில் ரசிகமணி நினைவு நாள்)

### சொந்த இடங்களுக்கு இடமாற்றம்

யாழ் மாவட்டத்திலுள்ள மாநகர, நகர, பிரதேச சபைகளான உளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் அவரவர் சொந்த இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுளளனர்.

## ஹெலியை முந்தும் திடீர் மணிஓசை

ஹெலி, விமானங்களின் நடமாட்டம் காணப்படும் வேளைகளில் சாவகச்சேரிப் பகுதிகளில் உள்ள பல வீடுகளில் எச்சரிக்கை மணி ஓசை ஒலிப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது. இப்பகுதி அடிக்கடி இரவு பகல் வேளைகளில் ஹெலி, பொம்மர், சீ-பிளேன்களின் தாக்குதலுக்குள்ளாகுவதனால் தங்கள் உறவினர்களையும். அயலவர்களையும் எச்சரிக்கைப் படுத்தவே இம்மணி கட்டப்பட்டுள்ளது. கோயில் குடியிருப்புப் பகுதியிலேயே இவ்வகையான மணி அதிகமாகக் காணப்படுகிறது. மிகக் குறுகிய காலத்திற்குள் இப்பகுதி மூன்று முறை பொம்மர்த்தாக்குதலுக்கு உட்பட்டது குறிப்பிடத்தக்கது. (ப-32)

றிச்சர்ட் டி சொய்ஸா

## கொலை பற்றி விவாதிக்க இன்று பாராளுமன்றத்தில் சிறப்புக் கூட்டம்

பத்திரிகையாளரும், பிரபல தொலைக்காட்சி அறிவிப்பாளருமாகிய றிச்சர்ட் டி சொய்ஸாவின் கொலை தொடர்பாக விவாதம் நடாத்தவென இன்று ஞாயிற்றுக்கிழமை பாராளுமன்றத்தில் சிறப்புக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

இவ்வருடம் பெப்ரவரி மாதம் பொலிஸ் சீருடையில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்ட றிச்சர்ட் டி சொய்ஸா பின்னர் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இவரது கொலை தொடர்பாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகள் அனைத்தும் வெறும் கண் துடைப்பு என எதிர்க்கட்சிகள் ஆட்சேபனை தெரிவித்திருந்தன.

தனது மகனின் கொலைக்கு அரசபடைகளைத் தான் சந்தேகிப்பதாக சொய்ஸாவின் தாயாரும் தமிழ்ப்பெண்மணியும் டாக்டருமான திருமதி சவரிமுத்து தெரிவித்திருந்தார்.

இவரது மர்ம மரணம் தொடர்பாகக்கடந்த ஆகஸ்ட் மாதம் தீர்ப்பு வழங்கிய நீதிபதி கொலைக்கான தகுந்த ஆதாரமில்லை எனக்கூறி வழக்கைத் தள்ளுபடி செய்திருந்தார்.

ஆனால் இது தொடர்பாக விசாரணை செய்ய நீதி விசாரணை ஆணைக்குழுவொன்றை அரசு நியமிக்க வேண்டுமென எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

### முகாமையாளருக்கு அடிக்கடி இடமாற்றம்

தீவுப்பகுதியிலுள்ள ஒரு பல நோ. கூ சங்கக் கிளைக் கடையில் கடமையாற்றி வரும் கிளை முகாமையாளர் ஒருவருக்குத் திடீர் திடீரென அடிக்கடி இடமாற்றங்கள் கிடைத்து வருவதாகத் தெரிவிக்கபபடுகின்றது.

அச்சங்கத்தில் பெருந்தொகையான ஊழியர்களும் கிளை முகாமையாளர்களும் சேவையில் ஈடுபட்டுளள போதிலும் இந்தக் கிளை முகாமையாளருக்கு மட்டுமே இப்படி அடிக்கடி இடமாற்ற உத்தரவு கிடைக்கிறதாம்.

இக்கிளை முகாமையாளர் அச்சங்கத்தின் தொழிற் சங்கத் தலைவர் என்பதும், இவ்வருடத்திற்குள் நான்கு தடவைகள் இவருக்கு இடமாற்றம் கொடுக்கப்பட்டுளளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (20)

## உலக அரங்கில்

### ஈராக் பணயக்கைதிகளை ஏற்றிச் செல்ல வெளி விமானங்களுக்கு இடமில்லை

குவைத்தில் தங்கியுள்ள சகல வெளிநாட்டுப் பணயக் கைதிகளையும் தமது தாய்நாட்டிற்கு திரும்ப ஈராக் அனுமதி அளித்துள்ளது. அனைவரும் கிறிஸ்மஸ் தினத்திற்கு முன்னதாகவே வெளியேறி விடவேண்டும் என ஈராக் வெளியுறவு அமைச்சர் தாரிக்ஹஸீஸ் தெரிவித்துள்ளார்.

குவைத்தில் இருந்து வெளியேறுபவர்களை ஈராக்கிய விமானங்களே ஏற்றிச்செல்லும். வேறு எந்தநாட்டு விமானங்களும் இதற்கு அனுமதிக்கப்படமாட்டாது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை தமக்கிடையே தோன்றியுள்ள தப்பபிப்பிராயங்களை நீக்கும் முகமாக விரைவில் அமெரிக்கா ஈராக்குடன் பேச்சு நடாத்த முன் வரவேண்டும் எனவும் அமைச்சர் தாரிக்ஹஸீஸ் வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### எர்ஷாத்தை கைது செய்யுமாறு பல்கலைக்கழகமாணவர் ஆர்ப்பாட்டம்

பங்களாதேஷில் நேற்று டாக்கா பல்கலைக்கழகத்திற்கு முன்பாக பெரும் தொகையான மாணவர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தவாறு பல்கலைக்கழகத்தினுள் நுழைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி எர்ஷாத் பதவி விலகியதை மகிழ்ச்சியுடன் கொண்டாடிய இம்மாணவர்கள் எர்ஷாத் எங்கிருந்தாலும் உடனடியாக கைது செய்யப்படவேண்டும் எனவும் கோஷமிட்டனர். எர்ஷாத்தின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டது.

பங்களாதேஷில் பதவிவிலகிய எர்ஷாத்தை கைது செய்து விசாரணை நடாத்த வேண்டும் என சகல தரப்பிலும் நெருக்கடி ஏற்பட்டுவருகின்ற போதிலும் இடைக்கால ஜனாதிபதியாக தற்போது பதவிவகிக்கும் வயோதிபரான முன்னாள் தலைமை நீதிபதியான சஹாபுதீன் அஹமட் மௌனமாகவே இருந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே பதவிவிலகிய முன்னாள் ஜனாதிபதி இராணுவ பாதுகாப்பில் இருப்பதாக சில செய்திகள் தெரிவிக்கின்றன. இவர் வெளிநாடு ஒன்றில் அரசியல் தஞ்சம் கோரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

### மீண்டும் பனங்கட்டி விற்பனை ஆரம்பமாகியுள்ளது

வவுனியாவில் ஊரடங்கு உத்தரவு தொடர்ந்ததன் காரணமாக ஏற்பட்ட சீனியின் தட்டுப்பாடு குடாநாட்டில் பனங்கட்டிக்கு திடீர் கிராக்கியை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் தனிப்பட்ட கரும்பட்டி உற்பத்தியாளர்களது - விற்பனையாளர்களதும் உற்பத்தி - விற்பனை முயற்சிகள் அதிகரித்துள்ளன.

ஏற்கனவே பாணியாகச் சேமித்து வைத்திருந்த பதனீரைப் 'பனங்கட்டியாக்கும்' முயற்சியில் சில தென்னை பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களும் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. (32)

#### ஊரடங்கு நீக்கம்

வவுனியா மாவட்டத்தில் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் நேற்றுக்காலை முதல் முற்றாக நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

#### வங்காலை...

இதே வேளை வங்காலையிலிருந்து இடம் பெயர்ந்த மக்களை மீண்டும் வந்து குடியேறும்படி தள்ளாடி இராணுவத்தினர் பணித்துள்ளனராம். (24, 33)

#### அமெரிக்க...

பொருட்களைக் கையளித்தார்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் அரிசி, மா, சீனி, பருப்பு, பால்மா என்பன அன்பளிப்புச் செய்யப்பட்டன. (13)




இப் பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி, 'லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 09-12-90 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

யாழ் பெரியாஸ்பத்திரிக்கு

# சத்திரசிகிச்சை உபகரணங்கள் எடுத்துவர அனுமதி மறுப்பு

யாழ் போதனா வைத்தியசாலைக்கு முக்கிய சத்திரசிகிச்சை உபகரணங்களையும், மயக்க மருந்தையும் எடுத்து வருவதற்கு கூட்டுப்படை தலைமையகம் தடையாக இருந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாடுகளிலிருந்து கொழும்புக்குக் கொண்டுவரப்பட்ட இந்த உபகரணங்களை யாழ்ப்பாணம் எடுத்துவர அனுமதி கோரப்பட்ட போது கூட்டுப்படை தலைமையகம் அனுமதி மறுத்துள்ளது.

அத்துடன் பெரிய சத்திரசிகிச்சைகளுக்குப் பயன்படுத்தும் மயக்க மருந்தை எடுத்து வருவதற்கும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

நீண்ட நேரம் மயக்கத்தைக் கொடுக்கக்கூடிய இந்த மருந்து வகைகள் போதியளவு எடுத்துவர அனுமதிக்கப்படாததினால் சாதாரண சத்திரசிகிச்சைகளுக்குப் பயன்படுத்தப்படும் குறைந்தளவு நேரம் மயக்கத்தைக் கொடுக்கும் மருந்தைப் பயன் படுத்த வேண்டியுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால் சத்திரசிகிச்சைக்கு உள்ளாகும் நோயாளிகள் இரத்தப் பெருக்கு அபாய அதிக உடல் வலியையும் தாங்க வேண்டியுள்ளதாகவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (74)

## காங்கேசன்துறைக் கொத்தணி பாடசாலை மாற்று ஒழுங்கு

இராணுவ நடவடிக்கையினால் முற்றாக இயங்க முடியாதுள்ள காங்கேசன்துறைக் கொத்தணியைச் சேர்ந்த 11 பாடசாலைகளும் மாற்று ஒழுங்குத் திட்டத்தின் கீழ் பின்வரும் இடங்களில் பகல் ஒரு மணிமுதல் இயங்கி வருகின்றன.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி, நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலயம் சுன்னாகம்ஸ்கந்தவரோதயாக்கல்லூரியிலும், காங்கேசன்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் இணுவில் சைவ மகாஜன வித்தியாலயத்திலும், ஊறணி க்னிஷ்ட வித்தியாலயம் இளவாலை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்திலும், தையிட்டி கணேச வித்தியாலயம் மயிலணி மகா வித்தியாலயத்திலும், தையிட்டி சிவகுருநாத வித்தியாலயம் மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்திலும், மயிலிட்டி றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்திலும், மயிலிட்டி கலைமகள் வித்தியாலயம் சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயத்திலும், பலாலி சித்தி விநாயகர் வித்தியாலயம் மல்லாகம்கனிஷ்ட வித்தியாலயத்திலும், பலாலி வடக்கு அ.த.க. பாடசாலை மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்திலும் நடைபெறுகின்றன.

இதுவரை சமுகம் தராத இப்பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களை திங்கள் பகல் 1 மணி முதல் குறிப்பிட்ட பாடசாலைகளுக்கு சமுகம் தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது (32)

#### 79 தமிழ்ப் ..

சென்று தடுத்து வைத்துள்ளனர்.

இதனிடையேமூதூர்ப்பகுதியிலுள்ள ஜீ பி. எஸ் இராணுவமுகாமில் இருந்து கடந்த 28ந்திகதி வெளியே வந்தஇராணுவத்தினர் சம்பூர் பகுதியில் வைத்து 2 பிள்ளைகளின் தாயான திருமதி மோகனசுந்தரம் மலர் (24) என்பவரை பாலியல் வன்முறைக்குட்படுத்தியுள்ளனர்.

இதேபோன்று மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஆரையம்பதி 3ம் கட்டையைச்சேர்ந்த நல்லதம்பி அனுசியா (18) எனும் பெண்ணை பாலியல் வன்முறைக்குட்படுத்திய ரெலோ இயக்கத்தினர் அப்பெண்ணை கழுத்து நெரித்துக் கொன்றுள்ளனர்.

பின்னர் அப்பெண்ணின் உடலை அருகிலுள்ள மட்டக்களப்பு வாவியில் போட்டுள்ளனர்.

கிழக்குப்பகுதியில் மட்டும் கடந்த நான்கு மாதங்களில் 60 பொதுமக்கள் வைத்திய மற்றும் உணவு வசதிகள் இன்றி பரிதாபமரணத்தை தழுவியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (71)

#### உலகத்...

குறித்தும், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நிதிஉதவிகளை வழங்க உலகத்தமிழர் வங்கி அமைப்பது குறித்தும் முக்கியமாக ஆராயப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

#### யாழ்நகரில்—

இதற்கான மருந்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு உயிரிழப்புகள் அதிகரிப்பதாலுமே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது. (74

#### வைத்தியசாலை...

யாழ் போதனா வைத்தியசாலைத் தேவைக்கென வழங்கப்பட்ட 25 பெரல் டீசல் முடிவடையும் நிலையை அடைந்திருப்பதை அடுத்தே மின்விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

கப்பலில் டீசல் கொண்டுவரப்பட்டாலேயே மின் விநியோகத்தை மீண்டும் சீர் செய்ய முடியும் என மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (74)

#### மாங்குளம்—

லைப் புலிகள் அப்பகுதிகளில் கண்ணிவெடி, தரை வெடிகளை தொடர்ந்து அகற்றி வருகின்றனர்.

இது வரையில் பொதுமக்களை அப்பகுதிக்குச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை மாங்குளம் புதிய கொலனி, கொலனிப் பகுதி மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்புவதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

சிலர் தமது வீடுகளை வந்து பார்வையிட்டுச் செல்கின்றனர். சிலரது வீடுகள் சேதமடைந்துள்ளன. மண் குடிசைகள் இடிந்து விழுந்துள்ளன.

தமது வீடுகளில் தங்குவதற்கான ஒழுங்கு நடவடிக்கைகளை சிலர் மேற்கொண்டு வருகின்றனர். புதிய கொலனிப் பகுதி முகாமிலிருந்து ஒரு மைல் தொலைவில் இருப்பது குறிப்பிடத்தக்கது. (38)

## காலமானார்கள்

### இளையதம்பி முத்துத்தம்பி M. A.

(முன்னாள் பொருளியல் விரிவுரையாளர்- யாழ் பல்கலைக்கழகம்)

இவர் காலஞ்சென்ற(சங்கீத பூஷணம்) சுந்தரேஸ்வரியின் அன்புக்கணவரும், Dr ஸ்ரீதரன்(பொறியியல் கலாநிதி- அமெரிக்கா), Dr ஸ்ரீஜெயந்தா(பொறியியல் கலாநிதி-அமெரிக்கா), திருமதி ராதிகா நிருபன்(முன்னாள் விரிவுரையாளர், கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம்), திருமதி வசந்திக்கா சிவகுமார்(மருத்துவ பீட மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ,பொறியியல் கலாநிதி மாதினி, ஏவிஸ்(M Sc), பொறியியலாளர் நிருபன் வைத்திய கலாநிதி சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 30. 11 90-ல் கலைச்சோலை, கரவெட்டியில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

12070 தகவல்- க. சுப்பிரமணியம்.

### திருமதி மயில்வாகனம் நாகரெத்தினம்

இவர் காலஞ் சென்ற பொன்னையா மயில்வாகனத்தின் மனைவியும், மகேந்திரராஜா (பொலிஸ் திணைக்களம்),தனபாலசிங்கம (அவுஸ்திரேலியா), திலகவதி-சிவசுப்பிரமணியம் - சுந்தரலிங்கம் (கிராம சேவகர், ஈச்சமோட்டை), யோகேஸ்வரன் (அவுஸ்திரேலியா), பத்மாவதி - வீரமரணம் அடைந்த முன்னாள் அம்பாறை, யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் டயஸ் கந்தசாமி (தவராஜா) ஆகியோரின் அன்புத்தாயாரும், ராஜேஸ்வரி (அவுஸ்திரேலியா), ஜெயராசா செல்வலிங்கம் (ஓமான்), ராஜேஸ்வரராணி, வனிதா, பாமினி (அவுஸ்திரேலியா), ரங்கநாதன் - புனிதவதி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 31/1, ஈச்சமோட்டை வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்து திங்கட்கிழமை (10-12 90) காலை 10 மணியளவில் தகனக் கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

தகவல்: ம. சுந்தரலிங்கம்

31/1, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம். 12072